தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(07.04.2023 முதல் 11.04.2023)

அறிக்கைஎண்: 28/2023 தேதி: 06.04.2023

## அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37 - 38 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ ஆகவும் பதிவானது.

## அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (07.04.2023 முதல் 11.04.2023).

| கடந்தவாரவானிலை (03.04.2023 முதல் 05.04.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (07.04.2023 முதல் 11.04.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 03/04 | நாள்-2 04/04 | நாள்-3 05/04 | தேதி | நாள்-1 07/04 | நாள்-2 08/04 | நாள்-3 09/04 | நாள்-4 10/04 | நாள்-5 11/04 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 38 | 38 | 38 |
| 26 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 27 | 28 | 28 |
| 5 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 2 | 1 | 1 | 1 |
| 74-58 | 77-56 | 80-49 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-30 | 80-30 | 80-30 | 80-30 | 80-30 |
| 13 | 11 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 4 | 6 | 6 | 4 |
| கிழக்கு தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு தென் மேற்கு | தெற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு வட மேற்கு |

## அரியலூர் மாவட்டத்திற்கானவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 07.04.2023 முதல் 11.04.2023 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வப்பநிலை 37 – 38 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 – 6 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும். |
| பயறுவகை பயிர்கள் | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயறுவகை பயிர்களில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் தாக்கம் தென்பட்டால் 5 சத வேப்பங்கொட்டை சாறு கரைசலை தெளிக்கவேண்டும் |
| தென்னை | | தென்னை மரத்தை சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் மழை நீரை மண்ணில் சேமிக்க முடியும் |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் மூலம் துடைக்கவும். |

## குறுஞ்செய்தி

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும்.

**இயக்குநர்**